20.11.2024

அ.வ.எண். 383-2017

வாசா.1 - செந்தில்குமார்

<u>2 முதல் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

2 முதல் 4 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவரது எதிர் வழக்குரையில் பத்தி எண் 8 ல் 05.02.2007 அன்று 5ம் பிரதிவாதி ஒரு ரகுபதி என்பவருக்கு அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை விற்பனை செய்துவிட்டார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அன்றிலிருந்து ரகுபதி தான் அந்த சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்று எதிர் வழக்குரையில் சொல்லி உள்ளார் என்றால் ஆமாம். மேற்படி ரகுபதியை நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். 07.03.2007 தேதியில் 5ம் பிரதிவாதி பூபதி என்பவருக்கு சொத்துக்களை விற்பனை செய்துள்ளார் என்றால் ராமன கவுண்டர் பூமியை விற்கவில்லை என்பதால் அவர்களை நான் சேர்க்கவில்லை. அவ்வாறு பூபதிக்கு விற்பனை செய்த சொத்து எது என்றால் அது குழந்தைய கவுண்டரின் சொத்து நஞ்சப்ப கவுண்டரின் சொத்துக்களை தான் விற்பனை செய்துள்ளனர்.

முறைப்படி இந்த வழக்கை நான் தாக்கல் செய்யாததால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்போ அதற்கு பின்போ வழக்கு சொத்தில் நானோ, என் தாயாரோ கூட்டு அனுபவத்தில் இருந்தோம் என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சொத்தை கிரயம் பெற்ற பூபதியை எனக்கு நன்கு தெரியும்., அவருக்கு ஒரு பெண், ஒரு மகன் மனைவி பெயர் மக்கள் பெயர் தெரியாது. மேற்படி பூபதி ஒரே ஊரில் வசிக்கும் எனக்கு தெரிந்த நபர் என்றும் அதை தெரிந்துகொண்டு நான் அவரை இந்த வழக்கில் சேர்கவில்லை என்றால் சரியல்ல. 1934 பாகப்பிரிவினையில் ராமன கவுண்டருக்கும், நஞ்சப்ப கவுண்டருக்கும் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டு

இருந்தாலும் அவர்கள் ஆவணத்தில் உள்ளபடி அனுபவத்தில் இல்லாமல் சொத்துக்களை மாற்றி அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அந்த விவரங்கள் எனக்கு தெரிந்தும் அதை மறைத்து நான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த சொத்தில் இவ்வளவு பிரச்சனைகள் உள்ளது தெரிந்தும் விளம்புகை பரிகாரம் கேட்காமல் பாகப்பிரிவினை வழக்கு கேட்டுள்ளது ஏற்றுக்கொள்ள கூடியது அல்ல என்றால் சரியல்ல. ஏற்கனவே வழக்கிற்கு முன்னிட்டு சொத்து பொறுத்து ஆவணங்கள் ஏற்படுத்தி உள்ளதால் அந்த ஆவணங்கள் பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்காமல் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட பூமி திருநகர் என்ற பெயரில் மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு பல நபர்கள் கிரயம் பெற்று விட்டனர் என்றால் சரியல்ல. அந்த விவரத்தை மறைக்கவே வில்லங்க சான்றிதழ் எடுக்காமல் நான் இந்த வழக்கை தாக்கல் செய்யாமல் தவிர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கூட்டு சுவாதீனத்தில் இல்லாமல் அதற்கான முறையான கட்டணம் செலுத்தாமல் குறைந்த நீதிமன்ற கட்டணம் செலுத்தி உள்ளது ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. நான் வழக்கை என் தாயார் இறந்து அல்லது என் தகப்பனார் இறந்த பின்னிட்டு உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யாததால் காலவரையறை வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

9ம் பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லாததால் அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பபட்டு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

மறுவிசாரணை இல்லை.

Sd/செந்தில்குமார்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur